අතුරුදහන් වූ තැනැත්තන් පිළිබඳ කාර්යාලය
காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம்
**OFFICE ON MISSING PERSONS**

---

**ஊடக வெளியீடு** **30 ஜனவரி 2019**

**மன்னார் பாரிய மனித புதைகுழிகளின் மாதிரிகளைக் கார்பன் பரிசோதனைக்காக சர்வதேச ஆய்வகத்திற்கு கையளிப்பதில் பார்வையாளராக காணாமற் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் பங்கு பற்றியது**

2019 தை மாதம் 25ம் திகதியன்று மன்னார் நகரின் ச.தொ.ச. கட்டிடத்திலிருக்கும் பாரிய மனித புதைகுழியிலிருந்து (வழக்கு இலக்கம் B/232/2018) எடுக்கப்பட்ட எலும்புகளின் ஆறு மாதிரிகளைக் கதிரியக்கக் கார்பன் கால நிர்ணயம் செய்வதற்காக அமெரிக்க ஐக்கிய நாடுகளின், புளோரிடா மாநிலத்தின் மியாமி நகரிலுள்ள பீட்டா அனாலிடிக் நிறுவனத்திற்குக் கையளிக்கப்பட்டது. இவை காணப்பட்ட இடத்தில் விசாரணைக் குழுவிற்குத் தலைமை தாங்கும் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரியாகிய மருத்துவக் கலாநிதி சமிந்த இராஜபக்ச அவர்களால் இம்மாதிரிகள் கையளிக்கப்பட்டன. மேலதிகமாக காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலக ஆணையாளராகிய திரு. மிராக் றகீம் அவர்களும் காணாமற்போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஆட்களின் குடும்பங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் திரு. எஸ். நிரஞ்சன் மற்றும் ரணீதா ஞானராஜா ஆகிய இரு வழக்கறிஞர்களும் கையளிக்கப்படுவதை அவதானித்ததார்கள்.

காணாமற் போன ஆட்கள் பற்றிய அலுவலகமானது 2016ம் ஆண்டு 14 ஆம் இலக்க காணாமற்போன ஆட்கள் பற்றிய (தாபித்தலும், நிருவகித்தலும். பணிகளை நிறைவேற்றுதலும்) சட்டத்தின்கீழ் காணாமற்போன ஆட்களைத் தேடிக் கண்டுபிடிக்கும் பிரதான ஆணையைக் கொண்டுள்ளது. அதன் விசாரணை அதிகாரத்தின் கீழ் காணாமற்போன ஆட்கள் பற்றிய ஆணைக்குழுவிற்கு சந்தேகத்திற்கிடமான புதைகுழிகளைத் அகழும் போதும் மனித எச்சங்களை தோண்டி எடுக்கும்போதும் ஒரு கண்காணிப்பாளராக கடமையாற்ற நீதவான் நீதிமன்றத்தில் விண்ணப்பிக்கும் அதிகாரம் [பகுதி 12(d)]. உள்ளது. காணாமற்போன ஆட்கள் பற்றிய ஆணைக்குழுவின் இவ்வாறான கண்காணிப்பாளராக கடமையாற்ற சமர்ப்பித்த விண்ணப்பமானது மன்னார் நீதிமன்ற நீதிபதியால் கடந்த 2018 ஆனி மாதம் 4ம் திகதியன்று ஏற்றுக்கொள்ளப்பட்டு அதுமுதல் அகழ்வாராய்ச்சி முன்னெடுப்பைக் கண்காணித்து வருகின்றது

கையளிக்கப்படும் செயற்பாட்டினை கண்காணிக்க கா.போ.ஆ. அலுவலகம் முடிவு செய்ததற்கான காரணம், விசாரணைக்குட்படுத்தப்படும் இவ்வழக்கானது தொடர்ச்சியாக பொறுப்பானவர்கள் கையில் இருப்பதை உறுதி செய்து கொள்வதற்காகவும் இது போன்ற இதர பாரிய மனித புதைகுழிகளில்

எடுக்கப்பட்ட மனித எச்சங்கள் கார்பன் திகதியிடலுக்காக அனுப்பப்பட்டபோது ஏற்பட்ட சந்தேகங்களைக் குறைத்திடவேயாகும். தாம் கண்காணித்துவரும் மன்னார் பாரிய மனித புதைகுழி பற்றிய விசாரணை முன்னெடுப்புக்களில் வெளிப்படைத் தன்மை உறுதி செய்யப்பட்டால் மட்டுமே காணாமல் போனவர்கள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களினதும் பொதுமக்களினதும் நம்பிக்கையை உறுதி செய்துகொள்ள முடியும் என அது கருதுகின்றது. காணாமற் போனோர் அலுவலகமானது பீடா ஆய்வுகூட பரிசோதனை செலவுகளையும், மேலதிகமாக சட்ட வைத்திய அதிகாரி மற்றும் கா.போ.அ. ஆணையாளர் ஆகியோரது பிரயாணச் செலவினங்களையும் தந்துதவியுள்ளது. 2018 ஆடி மாதம் முதல் காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகமானது அகழ்வாய்வு செய்யும் குழுவினரது உணவு, தங்குமிட வசதிகள், மற்றும் இதர பல்தரப்பட்ட செலவினங்களையும் தாம் ஏற்றுக் கொண்டுள்ளதோடு பருவமழைக் காலங்களில் புதைகுழிகள் இருக்கும் இடங்களை பாதுகாக்க தார்ப்பாய் துணிகளை கொள்முதல் செய்ய நிதியுதவியும் அளித்துள்ளது.

மனித எச்சங்களின் ரேடியோ கார்பன் பரிசோதனையானது, விசாரணைக் குழுவின் ஒன்றிணைந்த தீர்மானத்தின்படியும் மன்னார் நீதிவான் மதிப்பிற்குரிய டி. சரவணராஜா அவர்களது பணிப்புரையின்படியும் தை மாதம் 18ம் திகதி மேற்கொள்ளப்பட்டது. மாதிரி சேகரிப்பானது மதிப்பிற்குரிய மாஜிஸ்திரேட் நீதிவானின் அனுசரணையுடன் 2018 மார்கழி 18-20 திகதிகளில் காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் கண்காணிப்பின்கீழ் நடைபெற்றது. இம்மாதிரிகள் பரிசோதனைகூடத்தில் பரிசோதிக்கப்பட்டு அதன் அறிக்கையானது மாசி மாதத்தில் வெளியிடப்பட உள்ளது. அதன் பின்னர் பரிசோதனை முடிவுகள் மற்றும் இதர கண்டபிடிப்புக்கள் இணைந்த அகழ்வாய்வு அறிக்கையானது மன்னார் நீதவான் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படும்.

பீடா அனாலிடிக்ஸ் ஆய்வுகூடமானது பொம்ப் கார்பன் பள்ஸ் கார்பன் திகதியிடல் சம்பந்தமான விசேடத்துவத்தில் அங்கீகாரமும் நன்மதிப்பும் பெற்றதான ஓர் ஆய்வுகூடம் என்றபடியால் தெரிவு செய்யப்பட்டது. ரேடியோ கார்பன் திகதியிடலானது எலும்பு மற்றும் பல் மாதிரிகளில் எந்த அளவு கார்பன் 14 உள்ளது என்பதைக் அனுமானித்து அதற்கு சொந்தமான மிருகமோ அல்லது தாவரமோ எக்காலகட்டத்தில் உயிருடன் இருந்தது என்பதை கணிக்கும். இது தொல்லியல் மற்றும் தடயவியல் துறைகளில் மனித எச்சங்கள் அவை வாழ்ந்த தினங்களைக் கூரமையாய் காணும் வழிமுறையாகும். இரண்டாம் உலகப் போருக்குப் பின் இறந்த நபர்களின் எலும்புக்கூடுகள் சம்பந்தமாக கார்பன் 14 பரிசோதனைகள் அந்நபர் எப்போது இறந்தார் என்பது பற்றி அதிகூர்மையான திகதியைக் சுட நிர்ணயிக்க முடியுமான ஒரு வழிமுறையாகும். ரேடியோ கார்பன் திகதியிடல் அறிக்கையுடன் கலாநிதி இராஜபக்ச அவர்களின் தலைமையில் அமைந்த விசாரணைக் குழுவின் முடிவுகளையும் சேர்த்து தை மாதம் 22ம் திகதிவரை அகழப்பட்ட 300க்கும் அதிகமான எலும்புக் கூடுகள் ஒரே நாளில் உண்டானவையா அல்லது பல்வேறு வரலாற்றுக் காலங்களுக்கு உரித்தானவையா என்பதுபோன்ற முக்கிய கேள்விகளுக்கு விடைபெற உதவும்.